# கோபிசெட்டிபாளையம் நகராட்சி
## 29.10.2024 ந் தேதி நடைபெற்ற சாதாரண கூட்ட நடவடிக்கைகள் தீர்மான நகல்

1. கோபிசெட்டிபாளையம் நகராட்சி பகுதியில் பொது மக்களின் அன்றாட தேவைகளுக்கு 267 எண்ணிக்கை சிறுவிசை மின் மோட்டார் இயக்கப்படுகிறது. இவைகள் வார்டு எண் 1 முதல் 30 வரை உள்ள பகுதிகளில் குடிநீர் அல்லாத பிற உபயோக பயன்பாட்டிற்கு இயக்கப்படுகிறது. 1.0 HP முதல் 5.0 HP வரை சப்மிர் சபிள் ஆழ்குழாய் கிணறு மின் மோட்டார்கள் இயக்கப்படுகிறது.

இவைகளில் அவ்வப்பொழுது ஏற்படும் பழுதுகள் மின் மோட்டார் காயில் ரிவைண்டிங் செய்தல், பம்பு உதிரிபாகங்கள் பொருத்துதல் ஸ்டாரில் ஏற்படும் பழுதுகள், மின் உபகரணங்கள் பொருத்துதல் புதிய கேபிள் பொருத்துதல் ஆகிய பணிகள் அவ்வப்பொழுது சரி செய்து இயக்கபட வேண்டி உள்ளது. இப்பணிகள் 2024–2025 ஆண்டு 6 மாத காலத்திற்கு (அக்டோபர் முதல் மார்ச் வரை) பராமரிப்பு பணிகள் மேற்கொள்ளபட உள்ளது. இதற்கான மதிப்பீடு 4.75 இலட்சத்திற்கு ஏற்கனவே செய்து கொண்டிருந்த M/S எக்ஸ்பிளோஸிங் என்டர் பிரைசஸ், கோபிசெட்டிபாளையம் அவர்கள், 2023–2024 உள்ள மதிப்பீடு தொகையில் பராமரிப்பு பணிகள் மேற்கொள்ள ஒப்பு கொண்டதால் மன்றத்தின் அனுமதிக்கு வேண்டப்படுகிறது.

**அலுவலகக் குறிப்பு :** 1. மன்றம் அனுமதிக்கலாம்.
2. மேற்படி பணிக்கான செலவினம் குடிநீர் நிதியில் மேற்கொள்ளலாம்.

**அலுவலகக் குறிப்பு :– 1 மற்றும் 2 அனுமதிக்கப்பட்டது மன்ற தீர்மான எண்.1005**

2. கோபிசெட்டிபாளையம் நகராட்சி குடிநீர் விநியோகம் தலைமை நீரேற்றும் நிலையம் மூலம் வழங்கப்படுகிறது. ராவாட்டர் 120 HP மற்றும் 180 HP கிலியர் வாட்டர் மோட்டார் மூலம் இயக்கப்படுகிறது. ராவாட்டர் ஆற்று தண்ணீர் சுத்தம் செய்வதற்கு ஆலம் பயன்படுத்தப்படுகிறது. சுத்தம் செய்த குடிநீர் நகர் பகுதிகளில் உள்ள மேல்நிலை தொட்டிகளுக்கு ஏற்றப்பட்டு பாதுகாப்பான குடிநீர் விநியோகம் செய்யப்படுகிறது. 1 மாதத்திற்கு 825Kg வீதம் பயன்படுத்தப்பட்டு சுத்திகரிப்பு செய்யப்படுகிறது. 1 வருடத்திற்கு 10 டன் தேவைப்படுகிறது. 1 டன் ரூ.11610/– வீதம் 10 டன்னிற்கு ரூ.116100/– மற்றும் 18% GST ரூ.20818 மொத்தம் ரூ.136998/– ஆகும். ஆகவே 2024–2025 ஆம் ஆண்டிற்கு ஆலம் வாங்குவதற்கு மதிப்பீடு ரூ.1,36,998/–ற்க்கு மன்றத்தின் அனுமதி வேண்டப்படுகிறது.

**அலுவலகக் குறிப்பு :** 1. மன்றம் அனுமதிக்கலாம்.
2. மேற்காண் செலவினத்தை நகராட்சி குடிநீர் நிதியில் செலவிட மன்றம் அனுமதிக்கலாம்.

**அலுவலகக் குறிப்பு :– 1 மற்றும் 2 அனுமதிக்கப்பட்டது மன்ற தீர்மான எண்.1006**

3. நகராட்சிக்கு சொந்தமான வாரசந்தை வணிக மைய கட்டிடத்தின் வடபுறத்தில் உள்ள மாடிப்படி (வரி விதிப்பு எண். 057/48 ) கொண்ட கடைக்கு 01.04.2023 முதல் 31.03.2026 வரையில் பூங்கொடி என்பவருக்கு மூன்றாண்டுகளுக்கு குத்தகை உரிமம் வழங்கப்பட்டிருந்தது,

மேற்படி நபர் கடையினை நடத்துவதில்லை அதனால் மேற்படி கடையினை நகராட்சி வசம் ஒப்படைப்பதாக தனது மனுவில் தெரிவித்துள்ளார், மேலும் உதவி வருவாய் அலுவலர் அவர்கள் தனது 14.10.2024 ம் தேதிய குறிப்பில், மேற்படி குத்தகைதாரர் பூங்கொடி கடையினை தொடர்ந்து

நடத்த இயலாததால் மேற்படி கடையினை 08.10.2024 முதல் நகராட்சி வசம் எற்றுக்கொள்ளப்பட்டதாகவும், மேற்படி கடைக்கு வழங்கப்பட்ட குத்தகை உரிமத்தை ரத்து செய்து பொது ஏலம் மற்றும் ஒப்பந்தப்புள்ளி கோரலாம் என தெரிவித்துள்ளார்,

எனவே வாரசந்தை வணிக மைய கட்டிடத்தின் வடபுறத்தில் உள்ள மாடிப்படி கடைக்கு (வரி விதிப்பு எண். 057/48) பொது ஏலம் மற்றும் ஒப்பந்தப்புள்ளி கோரவும், அதற்கான ஏல அறிக்கையினை விளம்பரம் செய்ய ஆகும் செலவினத்தை நகராட்சி பொது நிதியிலிருந்து மேற்கொள்ளவும். மேற்படி கடைக்கான கேட்பினை 2024 அக்டோபர் மாதம் (01.10.2024) முதல் நீக்கம் செய்யவும் மன்றத்தின் அனுமதி வேண்டப்படுகிறது.

**அலுவலகக்குறிப்பு :** மன்றம் அனுமதி வழங்கலாம்.

**அலுவலகக் குறிப்பு :– அனுமதிக்கப்பட்டது மன்ற தீர்மான எண்.1007**

4. இந்நகராட்சியின் பொதுசுகாதாரபிரிவின் பராமரிப்பில் உள்ள TN 36 BA 2139 Frond end loader வாகனத்தின் முன்புறம் உள்ள பழுதான பழைய லோடர் பக்கெட்டினை எடுத்து கொண்டு புதிய இரும்பு பக்கெட் பொருத்தி கொள்ள ஏற்கனவே நகர்மன்ற தீர்மான எண். 959. நாள். 29.08.2024 ல் மன்றம் ஒப்புதல் வழங்கியுள்ளதன் பேரில் இப்பணிக்கு 20.09.2024 ஆம் தேதி ஒப்பந்தபுள்ளிகள் பெறப்பட்டது. பெறப்பட்ட ஒப்பந்தப்புள்ளிகள் மன்றத்தின் பார்வைக்கும் முடிவிற்கும் வைக்கப்படுகிறது.

| வ.எண் | நிறுவனம் விபரம் | ஒப்பந்தபுள்ளி விலை விகிதம் |
|---|---|---|
| 1 | M/s.Siva Sakthi Industries, 1035B Perunthurai Road, Kunnathur – 638 103. | ரூ. 80,000 /– Including (18 % GST) |
| 2 | M/s.Gajalakshmi Industries, 88/162 Karungal Medu, Perumanalur Road, Kunnathur – 638 103. | ரூ. 79,700 /– Including (18 % GST) |

வரப்பெற்ற இரண்டு ஒப்பந்தப்புள்ளிகளில் வரிசை எண். 2– ல் கண்டுள்ள M/s.Gajalakshmi Industries, 88/162 Karungal Medu, Perumanalur Road, Kunnathur – 638 103 என்பவரின் ஒப்பந்தபுள்ளி விலை விகிதம் மற்றொன்றைவிட குறைவாக உள்ளதால் அதனை ஏற்று அந்நிறுவனத்தில் பணியினை மேற்கொள்ள மன்ற அனுமதி வேண்டப்படுகிறது. (ந.க.எண்.1360/2024/எச்1)

**அலுவலக குறிப்பு** : 1. மன்றம் அனுமதிக்கலாம்.

2. அவசர அவசியம் கருதி மன்ற அனுமதியினை எதிர்நோக்கி நகர்மன்ற தலைவர் அவர்களின் முன் அனுமதி பெற்று பணி உத்திரவு வழங்கி பணி மேற்கொண்டதை மன்றம் ஏற்கலாம்.

**அலுவலகக் குறிப்பு :– 1 மற்றும் 2 அனுமதிக்கப்பட்டது மன்ற தீர்மான எண்.1008**

5. இந்நகராட்சியில் இயங்கி வரும் Bio Gas Plant –ல் தினமும் சேகரமாகும் உணவுக் கழிவுகள், பழுங்கள் மற்றும் மாமிசக்கழிவுகளை அரைக்கும் Motor ன் Shreading Machine–ல் உள்ள 4 பிளேடுகள் தேய்ந்துள்ளதை மாற்றி புதியதாக 4 பிளேடுகள் பொருத்தும் பணிக்கு 22.07.2024 ஆம் தேதி விலைப்புள்ளிகள் பெறப்பட்டது. பெறப்பட்ட விலைப்புள்ளிகள் மன்றத்தின் பார்வைக்கும் முடிவிற்கும் வைக்கப்படுகிறது.

| வ.எ | நிறுவனம் விபரம் | விலைப்புள்ளி விலை விகிதம் |
|---|---|---|
| 1 | M/s. Fin air system, 72, Ranganatha street, Venkitapuram, Coimbatore . | ரூ. 7600/– + 18% GST |
| 2. | Green Enviro System, 357/2, Agarwal School Road, King Pudurpirivu, Coimbatore–08 | ரூ. 8700/– + 18% GST |
| 3. | M /s. Eco Environs Solutions, 20/2, Indira Ganthi Street, Palayapalayam, Erode. | ரூ. 6700 /– + 18% GST |

வரப்பெற்ற மூன்று விலைப்புள்ளிகளில் வரிசை எண்.3- ல் கண்டுள்ள M /s. Eco Environs Solutions, 20/2, Indira Ganthi Street, Palayapalayam, Erode என்பவரின் விலைப்புள்ளி விலை விகிதம் மற்ற இரண்டையும் விட குறைவாக உள்ளதால் அதனை ஏற்று அந்நிறுவனத்தில் இப்பணியினை மேற்கொள்ள மன்ற அனுமதி வேண்டப்படுகிறது. (ந.க.எண். 926 /2024/எச்1)

**அலுவலககுறிப்பு ; 1.** மன்றம் அனுமதிக்கலாம்.

**2.** நகர் மன்ற தலைவர் அவர்களின் முன் அனுமதி பெற்று பணி உத்திரவு வழங்கி பணி மேற்கொண்டதை மன்றம் ஏற்கலாம்.

**அலுவலகக் குறிப்பு :- 1 அனுமதிக்கப்பட்டது 2. ஏற்கப்பட்டது மன்ற தீர்மான எண்.1009.**

6. கோபிசெட்டிபாளையம் நகராட்சியின் சார்பில் கடந்த 15.08.2024 ஆம் தேதியன்று சுதந்திரம் தினம் இந்நகராட்சியில் சிறப்பாக கொண்டாடப்பட்டு நகராட்சி பள்ளிகளில் படிக்கும் மாணவ மாணவியர்களுக்கு போட்டிகள் நடத்தப்பட்டு பரிசுகள் வழங்கப்பட்டது.

மேற்படி நிகழ்விற்கு வருகை புரிந்தவர்களுக்கு டீ, கேக் வழங்கப்பட்டது. தூய்மைப் பணியாளர்கள் அனைவருக்கும் ஸ்வீட் பாக்கெட், மிக்சர் பாக்கெட் வழங்கப்பட்டது. வருகை புரிந்த அனைத்து நகர்மன்ற உறுப்பினர்களுக்கும் 78 ஆம் ஆண்டு சுதந்திர தின விழா நினைவாக " மகிழம்" மரக்கன்றுகள் வழங்கப்பட்டது.

இவ்விழா கொண்டாடப்பட்ட நிகழ்வில் பின்வரும் செலவினங்கள் நகராட்சி துப்புரவு அலுவலர் திரு. ப. சோழராஜ் அவர்களால் மேற்கொள்ளப்பட்டுள்ளது. (ந.க.எண்.1578/2024/எச்1)
அதன் விபரம் பின்வருமாறு :

| | | |
|---|---|---|
| 1 | "மகிழம்" மரக்கன்றுகள் 30 No's மற்றும் அலுவலக முகப்பில் வைக்கும் அலங்கார பூச்செடியுடன் 3 No 's செடிகள் வாங்கப்பட்டுள்ளது. மகிழம் மரக்கன்று 1 க்கு ரூ.50/- வீதம் 30 No 's 30 X 50 = ரூ.1500/- 3 No 's அலங்கார செடிகள் 3 x 450 = 1350 | ரூ.2850/- |
| 2 | டீ, கேக் வழங்கிய வகையில் ( 75 பார்சல் டீ, 7 5 கேக்)<br>டீ 75 x ரூ. 20 = ரூ. 1500/- , கேக் 75 x ரூ. 20 = ரூ.1500/- | ரூ.3000/- |
| 3 | தூய்மை பணியாளர்கள் மற்றும் இதர நபர்கள் உட்பட 200 பேருக்கு ஸ்வீட் பாக்கெட் மற்றும் காரம் பாக்கெட் விநியோகம் செய்தது 200 x ரூ. 25 = 5000/- | ரூ.5000/- |
| | மொத்தம் | ரூ.10850/- |

துப்புரவு அலுவலரால் செலவிடப்பட்ட செலவினத் தொகை ரூ. 10,850/- ஐ திரும்ப வழங்க மன்ற அனுமதி வேண்டப்படுகிறது.

**அலுவலக குறிப்பு** : மன்றம் அனுமதிக்கலாம்.

**அலுவலகக் குறிப்பு :- அனுமதிக்கப்பட்டது மன்ற தீர்மான எண்.1010**

7. இந்நகராட்சியின் எல்லைக்குட்பட்ட பகுதியில் உள்ள கீரிப்பள்ளம் ஓடையினை ஹிட்டாச்சி (Hitachi) வாகனம் கொண்டு படர் தாமரைகள், நானல் செடிகள் உள்ளிட்ட செடி கொடிகளை ஒதுக்கி ஓடையில் தண்ணீர் சீராக செல்லும் பணியினை மேற்கொள்ள ஏற்கனவே நகர்மன்றம் தீர்மான எண். 967 நாள். 29.08.2024 ல் ஒப்புதல் வழங்கியுள்ளதன் பேரில் ஹிட்டாச்சி (Hitachi) வாகனம் மணி நேரம் அடிப்படையில் (Work on hours basis) விநியோகம் செய்யும் பணிக்கு 20.09.2024 ஆம் தேதி ஒப்பந்தபுள்ளிகள் பெறப்பட்டது. பெறப்பட்ட ஒப்பந்தப்புள்ளிகள் மன்றத்தின் பார்வைக்கும் முடிவிற்கும் வைக்கப்படுகிறது.

| வ.எண் | நிறுவனம் விபரம் | ஒப்பந்தபுள்ளி விலை விகிதம் (ஒரு மணி நேரத்திற்கு) |
|---|---|---|
| 1 | M/s. Sri Saravanavel Constructions,<br>5 A, Parvathi Nagar,Naickankadu,<br>Gobichettipalayam - 638 476. | ரூ. 2,325/-<br>+<br>(18 % GST) |

| | | |
|---|---|---|
| 2 | M/s. Jaya Agency,<br>4/1214, S.P. Nagar,<br>Gobichettipalayam – 638 476. | ரூ. 2425/–<br>+<br>(18 % GST) |

வரப்பெற்ற இரண்டு ஒப்பந்தப்புள்ளிகளில் வரிசை எண். 1– ல் கண்டுள்ள M/s. Sri Saravanavel Constructions, 5 A, Parvathi Nagar, Naickankadu, Gobichettipalayam – 638 476. என்பவரின் ஒப்பந்தபுள்ளி விலை விகிதம் மற்றொன்றைவிட குறைவாக உள்ளதால் அதனை ஏற்று அந்நிறுவனத்தில் பணியினை மேற்கொள்ள மன்ற அனுமதி வேண்டப்படுகிறது. (ந,க,எண்.1437/2024/எச்1)

**அலுவலக குறிப்பு** : 1. மன்றம் அனுமதிக்கலாம்.

2. அவசர அவசியம் கருதி மன்ற அனுமதியினை எதிர்நோக்கி நகர்மன்ற தலைவர் அவர்களின் முன் அனுமதி பெற்று பணி உத்திரவு வழங்கி பணி மேற்கொண்டதை மன்றம் ஏற்கலாம்.

**அலுவலகக் குறிப்பு :– 1 அனுமதிக்கப்பட்டது. 2 ஏற்கப்பட்டது. மன்ற தீர்மான எண்.1011**

8. இந்நகராட்சியில் திடக்கழிவு மேலாண்மைப்பணியின் கீழ் செயல்படும் செயலாக்க மையங்களில் பணிகளை CCTV Camera மூலம் கண்காணிக்க ஏற்கனவே நகர்மன்றம் தீர்மான எண்.966 நாள். 29.08.2024ல் ஒப்புதல் வழங்கியுள்ளதன் பேரில் CCTV Camera பொருத்தி இப்பணிகளை கண்காணிக்கும் பணிக்கு 20.09.2024 ஆம் தேதி ஒப்பந்தபுள்ளிகள் பெறப்பட்டது. பெறப்பட்ட ஒப்பந்தப்புள்ளிகள் மன்றத்தின் பார்வைக்கும் முடிவிற்கும் வைக்கப்படுகிறது.

| வ.எண் | நிறுவனம் விபரம் | ஒப்பந்துபுள்ளி விலை விகிதம் (ஏழு கேமராக்கள் பொருத்துவதற்கு) |
|---|---|---|
| 1 | M/S.Agni Micro Tech,33Gr.Floor,<br>Saraswathi Towers.<br>10th Street, Gandhipuram,<br>Coimbatore – 641 001. | ரூ. 84,700/–<br>+<br>(18 % GST) |
| 2 | M/S.Pride Systems,<br>39/1 Erode Main Road,<br>Opp.Telephone Exchange,<br>Perudurai – 638 052. | ரூ. 84,500/–<br>+<br>(18 % GST) |

வரப்பெற்ற இரண்டு ஒப்பந்தப்புள்ளிகளில் வரிசை எண். 2– ல் கண்டுள்ள M/S. Pride Systems, 39/1 Erode Main Road, (Opposite) Telephone Exchange, Perundurai. Erode District என்பவரின் ஒப்பந்தபுள்ளி விலை விகிதம் மற்றொன்றைவிட குறைவாக உள்ளதால் அதனை ஏற்று அந்நிறுவனத்தில் பணியினை மேற்கொள்ள மன்ற அனுமதி வேண்டப்படுகிறது. (ந.க.எண்.1436/2024/எச்1)

**அலுவலக குறிப்பு** : 1. மன்றம் அனுமதிக்கலாம்.

2. அவசர அவசியம் கருதி மன்ற அனுமதியினை எதிர்நோக்கி நகர்மன்ற தலைவர் அவர்களின் முன் அனுமதி பெற்று பணி உத்திரவு வழங்கி பணி மேற்கொண்டதை மன்றம் ஏற்கலாம்.

**அலுவலகக் குறிப்பு :– 1. அனுமதிக்கப்பட்டது 2. ஏற்கப்பட்டது மன்ற தீர்மான எண்.1012**

9. இந்நகராட்சி கரட்டூர் வளமீட்பு மையத்தில் சேகரித்து வைக்கப்பட்டுள்ள பிளாஸ்டிக் கழிவுகளை மாற்று எரிபொருள் பயன்பாட்டிற்கு அரியலூர் Ultra Tech மற்றும் Dalmia சிமெண்ட் ஆலைகளுக்கும், Trichy Dalmia Cement ஆலைக்கும் சரக்கு ஏற்றி செல்லும் லாரிகள் மூலம் அனுப்பி வைத்திட வாடகைக்கு அமர்த்தும் முறையில் லாரிகளை விநியோகம் செய்யும் பணிக்கு 03.09.2024 ஆம் தேதி ஒப்பந்தபுள்ளிகள் பெறப்பட்டு பணிகள் மேற்கொள்ளப்பட்டு வரும் நிலையில் கடந்த 21.09.2024 ஆம் தேதியன்று இந்நகராட்சியின் பணிகளை நகராட்சி நிர்வாக இயக்குநரக கூடுதல் இயக்குநர் அவர்கள் ஆய்வு செய்து வழங்கி உள்ள அறிவுறுத்தல்களுக்கிணங்க RRC மையத்தில் உள்ள அனைத்து பிளாஸ்டிக் கழிவுகளையும் எதிர் வரும் 28.09.2024 ஆம் தேதிக்குள் சிமெணட் ஆலைகளுக்கு அனுப்பி வைக்க வேண்டுமென அறிவுறுத்தியுள்ளார்கள். இப்பணிக்கு ஏற்கனவே மன்றம் அனுமதித்த தொகையான ரூ.2.00 இலட்சத்துடன் கூடுதலாக ரூ.1.50 இலட்சம் ஆகும் என மதிப்பிடப்படுகிறது.

ஏற்கனவே இப்பணிக்கு சரக்கு ஏற்றி செல்லும் லாரிகளை விநியோகம் செய்யும் ஒப்பந்தாரரான M/S. Explosive Enter Prises, Gobichettipalayam அவர்களிடம் 27.09.2024 ஆம் தேதியிலிருந்து தொடர்ந்து லாரிகளை பெற்று இப்பணியினை மேற்கொள்ள மன்ற அனுமதி வேண்டப்படுகிறது.( ந.க.எண்.2861/2023/எச்1)

**அலுவலக குறிப்பு :** 1. மன்றம் அனுமதிக்கலாம்.

2. அவசர அவசியம் கருதி நகர்மன்ற தலைவர் அவர்களின் முன் அனுமதி பெற்று 27.09.2024 ஆம் தேதியிலிருந்து தொடர்ந்து லாரிகளை பெற்று இப்பணியினை மேற்கொண்டு வருவதை மன்றம் ஏற்கலாம்.

**அலுவலகக் குறிப்பு :– 1. அனுமதிக்கப்பட்டது 2. ஏற்றுக்கொள்ளப்பட்டது மன்ற தீர்மான எண்.1013**

10. கோபிசெட்டிபாளையம் நகராட்சியில் உள்ள 30 வார்டு பகுதிகளிலும் டெங்கு மற்றும் கொசுக்களால் பரவும் நோய்களை கட்டுப்படுத்திட அபேட் மருந்து தெளித்தல், கொசுப்புழுக்களை அழித்தல், நோய் பரவும் விதம் குறித்து பொது மக்களிடையே விழிப்புணர்வு ஏற்படுத்தும் பணிக்கு வெளிப்பணி ஒப்படைப்பு முறையில் M/s. L.D. Man Power Solutions, Vellore 638 602 என்னும் நிறுவனத்தினரிடம் தினமும் 37 கொசுபுழு தடுப்பு பணியாளர்களை (DBC Workers) பெற்று மேற்கொள்ளப்பட்டு வரும் நோய்த் தடுப்பு பணியின் ஒப்பந்தகாலம் 31.10.2024 ஆம் தேதியுடன் முடிவடைவதால், நகரின் பொதுசுகாதார நலன் கருதியும், நோய் தடுப்பு பணிகளின் அவசியம் கருதியும், நிர்வாக நலன் கருதியும் இப்பணியின் ஒப்பந்தக்காலத்தினை 01.11.2024 முதல் 30.11.2024 முடிய ஒருமாத காலத்திற்கு ஒப்பந்த காலத்தினை காலநீட்டிப்பு செய்து கொள்ளவும், ஒப்பந்தப்புள்ளி விலைவிகிதமான நாள் ஒன்றுக்கு நபர் ஒருவருக்கு ரூ.562/– என்னும் விலை விகிதத்தில் தொடர்ந்து அந்நிறுவனத்தினரிடமிருந்து கொசுபுழு தடுப்பு பணியாளர்களை பெற்று நோய் தடுப்பு பணிகளை நல்ல முறையில் மேற்கொள்ளவும் அதற்காகும் உத்தேச செலவினம் ரூ. 6,24/– இலட்சத்திற்க்கும் மன்றத்தின் ஒப்புதல் வேண்டப்படுகிறது. (ந.க.எண்.1018/2024/எச்1)

**அலுவலகக் குறிப்பு :** 1. மன்றம் அனுமதிக்கலாம்.

2. இதற்கான செலவினத்தை நகராட்சி பொதுநிதியிலிருந்து மேற்கொள்ளலாம்.

**அலுவலகக் குறிப்பு :– 1 .அனுமதிக்கப்பட்டது 2. அனுமதிக்கப்பட்டது மன்ற தீர்மான எண்.1014**

11. இந்நகராட்சியில் பணிபுரிந்து வரும் தூய்மைப்பணியாளர்களுக்கு 2024 – 2025 ஆம் ஆண்டிற்கு வழங்க வேண்டிய தளவாட சாமான்கள் மற்றும் பணி பாதுகாப்பு உபகரணங்கள் கொள்முதல் செய்து வழங்கிடவும் அதற்கான உத்தேச செலவினம் ரூ. 3.00 இலட்சத்திற்கும் மன்ற அனுமதி வேண்டப்படுகிறது. (ந.க.எண். 1706/2024/எச்1)

**அலுவலகக் குறிப்பு :** 1. மன்றம் அனுமதிக்கலாம்

2. நகராட்சி பொது நிதியிலிருந்து இதற்கான செலவினத்தினை மேற்கொள்ள மன்றம் அனுமதிக்கலாம்.

**அலுவலகக் குறிப்பு :– 1 மற்றும் 2 அனுமதிக்கப்பட்டது மன்ற தீர்மான எண்.1015**

12. இந்நகராட்சியில் பணிபுரிந்து வரும் தகுதி வாய்ந்த தூய்மை பணியாளர்கள் துப்புரவு பணி மேற்பார்வையாளர்கள் மற்றும் ஓட்டுனர்களுக்கு 2024 – 2025 ஆம் ஆண்டுவழங்க வேண்டிய காலணிகளை அரசு நிறுவனமான உதவி இயக்குநர், கதர் கிராமத்தொழில்கள், ஈரோடு அவர்களிடம் கொள்முதல் செய்து கொள்ள ஆகும் உத்தேச செலவினம் ரூ. 50,000/– க்கு மன்ற அனுமதி வேண்டப்படுகிறது. (ந.க.எண். 1215/2024/எச் 1)

**அலுவலக குறிப்பு :** 1. மன்றம் அனுமதிக்கலாம்.

2. இதற்கான செலவினத்தை நகராட்சி பொது நிதியிலிருந்து வழங்க மன்றம் அனுமதிக்கலாம்.

**அலுவலகக் குறிப்பு :– 1 மற்றும் 2 அனுமதிக்கப்பட்டது மன்ற தீர்மான எண்.1016**

13. இந்நகராட்சி பொதுசுகதாரப்பிரிவு டிப்பர் வாகனம் TN36J2724 ன் தகுதிசான்று 30.09.2024 ஆம் தேதியுடன் முடிவடைவதால் அவ்வாகனத்திற்கு தகுதிசான்று புதுப்பித்து வாகனத்தை இயக்க வேண்டி உள்ளதால் அவ்வாகனத்தில் ஏற்பட்டுள்ள பழுதுகளை செப்பனிட்டு தகுதிசான்று புதுப்பிக்க ஆகும் தோராய செலவினம் ரூ.1,20,000/– ற்கு மன்ற அனுமதி வேண்டப்படுகிறது.
( ந.க.எண். 1717/2024/எச்1)

**அலுவலகக் குறிப்பு :** 1. மன்றம் அனுமதிக்கலாம்.

2. இதற்கான செலவினத்தை நகராட்சி பொதுநிதியிலிருந்து மேற்கொள்ளலாம்.

**அலுவலகக் குறிப்பு :- 1 மற்றும் 2 அனுமதிக்கப்பட்டது மன்ற தீர்மான எண்.1017**

14. இந்நகராட்சி பொது சுகாதாரப் பிரிவில் மேற்கொள்ளப்பட்டு வரும் பல்வேறு பணிகளுக்கு தேவையான விழிப்புணர்வு பிளக்ஸ் போர்டுகள் கடந்த 29.07.2024 முதல் 09.09.2024 வரை பல்வேறு விழிப்புணர்வு பணிகளுக்கு M/s. STROKE DIGITAL 5, முத்துஷா வீதி, கோபிசெட்டிபாளையம் அவர்களிடம் ரூ.10,280/- ற்கு விழிப்புணர்வு விளம்பர பலகைகள் தயார் செய்து பொது இடங்களில் அமைத்தும், முகாம் நடைபெறும் போது விளம்பர பதாகைகள், பொருத்தியும் பணிகளை அவ்வப்போது மேற்கொண்டதை மன்றம் அங்கீகரித்து அந்நிறுவனத்திற்கு கீழ்காணும் விபரப்படி தொகை வழங்க வேண்டியுள்ளது.

| வ.எ | பிளக்ஸ் தயார்செய்த தேதி | விபரம் | அளவு | எண்ணிக் கை | வழங்கப்பட வேண்டிய தொகை ரூ. |
|---|---|---|---|---|---|
| 1 | 29.07.2024 | கரட்டூர் உரக்கிடங்கில் திடக்கழிவு மேலாண்மை திட்டம் நுண் உர செயலாக்க மையம் என்ற Flex தயார் செய்த வகையில் | 6' X 4' | 1 | 500/- |
| 2 | 30.07.2024 | கரட்டூர் உரக்கிடங்கில் வெளி ஆட்கள் உள்ளே வர அனுமதி இல்லை என்ற Flex தயார் செய்த வகையில் | 3' X 2' | 1 | 200/- |
| 3 | 30.07.2024 | இங்கு குப்பைகளை கொட்டாதீர் CCTV கேமராபொருத்தப்பட்டுள்ளது. மீறினால் தண்டிக்கப்படுவீர்கள் என்ற Flex தயார் செய்த வகையில் | 5' X 3.5' | 1 | 400/- |
| 4 | 12.08.2024 | போதைப் பொருட்கள் இல்லாத தமிழ்நாடு Drugs Free Tamilnadu என்ற Flex தயார் செய்த வகையில் | 8' X 3' | 2 | 1000/- |
| 5 | 14.08.2024 | 78 வது சுதந்திர தின விழா என்ற Flex தயார் செய்த வகையில் | 6' X 3' | 1 | 400/- |
| 6 | 20.08.2024 | உலக கொசுக்கள் தினம் என்ற Flex தயார் செய்த வகையில் | 5' X 4' | 1 | 400/- |
| 7 | 23.08.2024 | தூய்மையை நோக்கி மேலும் ஒரு படி தூய்மையே சேவை 2024 "Swachh Survekshan என்ற Flex தயார் செய்த வகையில் | 5' X 3' | 1 | 350/- |
| 8 | 24.08.2024 | தூய்மை பணியாளர்களுக்கான மருத்துவ முகாம் என்ற Flex தயார் செய்த வகையில் | 5' X 3' | 1 | 350/- |
| 9 | 24.08.2024 | கீரிப்பள்ளம் ஓடை தூர்வாரும் பணி என்ற Flex தயார் செய்த வகையில் | 10' X 4' | 1 | 600/- |
| 10 | 16.09.2024 | Swachhata Hi Seva 2024 என்ற Flex தயார் செய்த வகையில் | 6' X 4' | 2 | 1000/- |
| 11 | 23.09.2024 | Swachhata Hi Seva 2024 என்ற Flex தயார் செய்த வகையில் | 5' X 4' | 6 | 2400/- |
| 12 | 23.09.2024 | தூய்மை பணியாளர்களுக்கான மருத்துவ முகாம் என்ற Flex தயார் செய்த வகையில் | 6' X4' | 1 | 500/- |
| 13 | 26.09.2024 | 2009 ஆம் ஆண்டுகளுக்கு முன்னர் பிறந்தவர்கள் பிறப்புச் சான்றிதழ் பதிவேற்றம் என்ற Flex | 8' X4' | 1 | 530/- |

| | | | | | |
|---|---|---|---|---|---|
| | | தயார் செய்த வகையில் | | | |
| 14 | 15.10.2024 | வடகிழக்கு பருவமழை முன்னேற்பாடு பணிக்குழு | 5' X 3' | 2 | 600/- |
| 15 | 17.10.2024 | 2009 ஆம் ஆண்டுகளுக்கு முன்னர் பிறந்தவர்கள் பிறப்புச் சான்றிதழ் பதிவேற்றம் என்ற Flex தயார் செய்த வகையில் | 8' X4' | 3 | 1050/- |
| | | | மொத்தம் | 25 | ரூ. 10,280/- |

மேற்படி தொகையினை M/s. STROKE DIGITAL 5, முத்துஷா வீதி, கோபிசெட்டிபாளையம் அவர்களுக்கு வழங்கிட மன்ற ஒப்புதல் வேண்டப்படுகிறது. (ந.க.எண்.648/2023/எச்1)

**அலுவலக குறிப்பு :** 1. மன்றம் அனுமதிக்கலாம்.
2. இதற்கான செலவினத்தை நகராட்சி பொது நிதியிலிருந்து வழங்க மன்றம் அனுமதிக்கலாம்.

**அலுவலகக் குறிப்பு :- 1 மற்றும் 2 அனுமதிக்கப்பட்டது மன்ற தீர்மான எண்.1018**

15. இந்நகராட்சியில் தினமும் சேகரமாகும் ஈரக்கழிவுகள் கரட்டூரில் உள்ள இரண்டு நுண் உரமாக்கல் மையங்களிலும் ராமர் எக்ஸ்டென்சனில் உள்ள ஒரு நுண் உரமாக்கல் மையத்திலும் உரமாக்கப்பட்டு வருகிறது. மக்காத கழிவுகள் கரட்டூரில் உள்ள வள மீட்பு மையம் (RRC) யிலும் கையாளப்பட்டு வருகிறது.

இந்நகராட்சியின் 3 MCC மையங்கள், ஒரு RRC மையம், ஒரு BIO- GAS PLANT மற்றும் நகராட்சி பராமரிக்கும் CT, PT, போன்ற கழிப்பிடங்களில் தினமும் Lemon Gross Oil தெளித்து கிருமி நாசினம் செய்ய வேண்டியுள்ளது.

இப்பணிக்கு 30 லிட்டர் மட்டும் Lemon Gross Oil கொள்முதல் செய்து கொள்ளவும், அதற்காகும் செலவினம் ரூ.1,00,000/ -ற்கும் மன்ற அனுமதி வேண்டப்படுகிறது. ( ந.க.எண்.1703/2024/எச்1)

**அலுவலகக் குறிப்பு :** 1. மன்றம் அனுமதிக்கலாம்.

**அலுவலகக் குறிப்பு :- அனுமதிக்கப்பட்டது மன்ற தீர்மான எண்.1019**

16. சார் ஆட்சியர் மற்றும் வருவாய் கோட்டாட்சியர் கோபிசெட்டிபாளையம் அவர்கள் எதிர் வரும் வடகிழக்கு பருவமழையினையொட்டி நகராட்சியில் மேற்கொள்ளப்பட்டுள்ள மற்றும் மேற்கொள்ளப்பட வேண்டிய வெள்ளம் மற்றும் மழைகால முன்னெச்சரிக்கை நடவடிக்கைகளை 03.10.2024 ம் தேதியன்று நகராட்சி பகுதிகளை களஆய்வு செய்து இந்நகராட்சியின் மூலம் ஹிட்டாச்சி (Hitachi) வாகனம் கொண்டு கீரிப்பள்ளம் ஓடை தூர்வாரப்பட்ட இடங்களை பார்வையிட்ட பின்பு பஸ் நிலையம் முதல் சிவசண்முகம் வீதி முடிய உள்ள ஓடையினையும் பச்சமலை ரோட்டிலிருந்து திருப்பூர் ரோடு சந்திப்பு வரை உள்ள ஓடையினையும், அண்ணா நகர் பாலத்தின் இருபுறமும் உள்ள சுமார் 200 மீட்டர் நீளம் ஓடையினையும் ஹிட்டாச்சி (Hitachi) வாகனம் கொண்டு நன்கு தூர்வாரி சுத்தம் செய்ய வேண்டுமென அறிவுறுத்தியுள்ளார்கள். இப்பணியினை ஹிட்டாச்சி (Hitachi) வாகனம் கொண்டு தூர்வாரி சுத்தம் செய்ய சுமார் 25 மணிநேரம் ஆகும் எனவும் இப்பணிக்கு ஏற்கனவே ஒதுக்கீடு செய்யப்பட்ட மதீப்பீட்டு தொகையுடன் கூடுதலாக சுமார் ரூ.60,000/- செலவாகும் எனவும் மதிப்பிடப்படுகிறது.

எனவே, இக்கூடுதல் பணியினை ஏற்கனவே இப்பணியினை மேற்கொண்டு வரும் ஒப்பந்ததாரர் M/s. Sri Saravanavel Constructions, கோபிசெட்டிபாளையம் அவர்களிடம் அதே ஒப்பந்தபுள்ளி விலைவிகிதத்தில் **வடகிழக்கு பருவ மழை** முன்னேற்பாட்டு பணிகளின் அவசியம் கருதி மேற்கொள்ளவும் அதற்கான கூடுதல் உத்தேச செலவினம் ரூ.60,000/- ற்கும் மன்ற அனுமதி வேண்டப்படுகிறது. (ந.க.எண்.1437/2024/எச்1)

**அலுவலக குறிப்பு :** 1. மன்றம் அனுமதிக்கலாம்.
2. வடகிழக்கு பருவமழை முன்னெச்சரிக்கை நடவடிக்கை முன்னேற்பாட்டு பணிகள் என்பதால் நகர்மன்ற தலைவர் அவர்களின் முன் அனுமதியுடன் கூடுதல் பணியினை மேற்கொண்டதையும் மன்றம் ஏற்கலாம்.

**அலுவலகக் குறிப்பு :- 1. அனுமதிக்கப்பட்டது 2. ஏற்கப்பட்டது மன்ற தீர்மான எண்.1020**

17. வடகிழக்கு பருவமழை முன்னேற்பாட்டு பணியின் கீழ் நகராட்சிப் பகுதியில் உள்ள பெரிய மண் சாக்கடையினை 140 Hyundai ஹிட்டாச்சி வாகனம் கொண்டு சுத்தம் செய்யும் பணிக்கு 17.10.2024 ஆம் தேதி ஒப்பந்தபுள்ளிகள் பெறப்பட்டது. பெறப்பட்ட ஒப்பந்தப்புள்ளிகள் மன்றத்தின் பார்வைக்கும் முடிவிற்கும் வைக்கப்படுகிறது.

| வ.எண் | நிறுவனம் விபரம் | ஒப்பந்தபுள்ளி விலை விகிதம் (ஒரு மணி நேரத்திற்கு) |
|---|---|---|
| 1 | M/s. Sri Saravanavel Constructions,<br>5 A, Parvathi Nagar,<br>Naickankadu,<br>Gobichettipalayam – 638 476. | ரூ.1,600/–<br>+<br>(18 % GST) |
| 2 | M/s. Jayam Agency,<br>4/1214, S.P. Nagar,<br>Gobichettipalayam – 638 476. | ரூ. 1,750/–<br>+<br>(18 % GST) |

வரப்பெற்ற இரண்டு ஒப்பந்தப்புள்ளிகளில் வரிசை எண். 1– ல் கண்டுள்ள M/s. Sri Saravanavel Constructions, 5 A, Parvathi Nagar, Naickankadu, Gobichettipalayam – 638 476. என்பவரின் ஒப்பந்தபுள்ளி விலை விகிதம் மற்றொன்றைவிட குறைவாக உள்ளதால் அதனை ஏற்று அந்நிறுவனத்தில் பணியினை மேற்கொள்ளவும், இதற்கான உத்தேச செலவினம் ரூ.1.00 இலட்சத்திற்கும் மன்ற அனுமதி வேண்டப்படுகிறது. (ந.க.எண். 1437/2024/எச்1)

**அலுவலக குறிப்பு** : 1. மன்றம் அனுமதிக்கலாம்.
2. அவசர அவசியம் கருதி மன்ற அனுமதியினை எதிர்நோக்கி நகர்மன்ற தலைவர் அவர்களின் முன் அனுமதி பெற்று பணி உத்திரவு வழங்கியதை மன்றம் ஏற்கலாம்.

**அலுவலகக் குறிப்பு :– 1. அனுமதிக்கப்பட்டது 2. ஏற்கப்பட்டது மன்ற தீர்மான எண்.1021**

18. கோபிசெட்டிபாளையம் நகராட்சிக்குட்பட்ட வார்டு எண் 12இல் நகராட்சி அலுவலகத்திற்கு வர்ணம் அடித்தல் பணி மற்றும் சில பராமரத்து பணிகள் அத்தியாவசியமாக மேற்கொள்ள வேண்டியுள்ளது. அதற்கான மதிப்பீட்டு தொகை ரூ.8.50 இலட்சம் ஆகும். அச்செலவின தொகையினை பொது நிதியில் இருந்து மேற்கொள்ள மன்றத்தின் அனுமதிக்கு வைக்கப்படுகிறது.

**அலுவலகக்குறிப்பு** : 1. மன்றம் அனுமதி அளிக்கலாம்,
2. மேற்காண் செலவின தொகை ரூ.8,50,000/–னை பொது நிதியில் இருந்து மேற்கொள்ளவும் மன்றம் அனுமதி அளிக்கலாம்.

**அலுவலகக் குறிப்பு :– 1 மற்றும் 2 அனுமதிக்கப்பட்டது மன்ற தீர்மான எண்.1022**

19. கோபிசெட்டிபாளையம் நகராட்சியில் 2023–2024ல் கீழ்க்கண்ட பணிகளை செய்வதற்கு 26.09.2024 ஆம் தேதியில் ஒப்பந்தப்புள்ளி கோரப்பட்டதில் கீழே குறிப்பிட்டுள்ளவாறு வரப்பெற்றுள்ள ஒப்பந்தப்புள்ளிகள் மன்றத்தின் பார்வைக்கும் முடிவிற்கும் வைக்கப்படுகிறது.

| வ. எண் | வேலையின் பெயர் | மதிப்பீட்டு தொகை ரூ. | ஒப்பந்தப்புள்ளி அளித்துள்ள ஒப்பந்ததாரர் பெயர் விவரம் | கொடுத்துள்ள ஒப்பந்தப்புள்ளி விலை விகிதம் |
|---|---|---|---|---|
| 1 | மொடச்சூர் ஆரம்பப்பள்ளி, நாய்க்கன் காடு, சிலேட்டர் ஹவுஸ் வீதியில் உள்ள அங்கன் வாடி மையத்திற்கு கழிப்பிடம் கட்டும் பணி | 2,16,000 | M/s தங்கராஜீ ஒப்பந்ததாரர் | 0.4 சதவீதம் மதிப்பீட்டு விலை விகிதத்தை விட குறைவு |
| | | | M/s.சஞ்சய் எலக்ட்ரிக்கல்ஸ் ஒப்பந்ததாரர் | 2.00 சதவீதம் மதிப்பீட்டு விலை விகிதத்தை விட அதிகம் |

**அலுவலகக்குறிப்பு** : 1. மன்றம் அனுமதிக்கலாம்.
2. மேற்படி பணிக்கு குறைந்த ஒப்பந்தப்புள்ளி விலை விகிதம் அளித்துள்ள திரு.தங்கராஜீ அவர்களின்ஒப்பந்தப்புள்ளியை ஏற்கலம்..

**அலுவலகக் குறிப்பு :- 1. அனுமதிக்கப்பட்டது 2. ஏற்றுக்கொள்ளப்பட்டது மன்ற தீர்மான எண்.1023**

20. கோபிசெட்டிபாளையம் நகராட்சி நகரவை மகளிர் மேல்நிலைப்பள்ளி மற்றும் வேங்கம்மையார் நகராட்சி உயர்நிலைப்பள்ளிகளின் கட்டிடங்களின் உறுதி சான்று வழங்க தலைமையாசிரியர் அவர்கள் 23.09.2024ம் தேதிய கடிதத்தில் கேட்டுள்ளார்கள். மேலும், முதன்மைக்கல்வி அலுவலரின் செயல்முறைகளில் மாநில அரசு கட்டிடங்களுக்கு வரிவிதிப்பு செய்யும் பொருட்டு, உரிய ஆவணங்கள் சமர்ப்பிக்க பொது கட்டிட உரிமம் பெற கட்டிட உறுதிச்சான்று (Stability certificate) கேட்டுள்ளார்கள். எனவே கோபிசெட்டிபாளையம் நகராட்சிக்குட்பட்ட 9 எண்ணிக்கை பள்ளிகளுக்கு கட்டிட உறுதி சான்று (Stability Certificate) அரசு பொறியியல் கல்லூரியில் இருந்து வாங்க உத்தேச செலவினம் ரூ.5.00 இலட்சம் ஆகும். அச்செலவின தொகையினை கல்வி நிதியில் இருந்து மேற்கொள்ள மன்றத்தின் அனுமதிக்கு வைக்கப்படுகிறது.

**அலுவலகக்குறிப்பு** : 1. மன்றம் அனுமதி அளிக்கலாம்,
2. மேற்காண் செலவின தொகை ரூ.5,00,000/-னை கல்வி நிதியில் இருந்து மேற்கொள்ளவும் மன்றம் அனுமதி அளிக்கலாம்.

**அலுவலகக் குறிப்பு :- 1. மற்றும் 2. அனுமதிக்கப்பட்டது மன்ற தீர்மான எண்.1024**

21. கோபிசெட்டிபாளையம் நகராட்சியில் 2023-2024ல் கீழ்க்கண்ட பணிகளை செய்வதற்கு 25.09.2024 ஆம் தேதியில் ஒப்பந்தப்புள்ளிகள் கோரப்பட்டதில் கீழே குறிப்பிட்டுள்ளவாறு வரப்பெற்றுள்ள ஒப்பந்தப்புள்ளிகள் மன்றத்தின் பார்வைக்கும் முடிவிற்கும் வைக்கப்படுகிறது.

| வ. எண் | வேலையின் பெயர் | மதிப்பீட்டு தொகை ரூ. | ஒப்பந்தப்புள்ளி அளித்துள்ள ஒப்பந்ததாரர் பெயர் விவரம் | கொடுத்துள்ள ஒப்பந்தப்புள்ளி விலை விகிதம் |
|---|---|---|---|---|
| 1 | கோபிசெட்டிபாளையம் நகராட்சி அலுவலகம் மற்றும் தலைமை சுத்திகரிப்பு நிலையதல் உள்ள (EB Shut down) ஜெனரேட்டர் வசதி ஏற்படுத்தும் பணி | 2,36,000 | M/s.சஞ்சய் எலக்ட்ரிக்கல்ஸ் ஒப்பந்ததாரர் | 0.11 சதவீதம் மதிப்பீட்டு விலை விகிதத்தை விட குறைவு |
| | | | M/s தங்கராஜீ ஒப்பந்ததாரர் | 0.56 சதவீதம் மதிப்பீட்டு விலை விகிதத்தை விட அதிகம் |
| 2 | கோபிசெட்டிபாளையம் நகராட்சி கரட்டூர் எம்.சி.சி. கட்டிடத்தில் மின் இணைப்பு மாற்றுதல் கேபிள் அமைக்கும் பணி | 3,29,500 | M/s.சஞ்சய் எலக்ட்ரிக்கல்ஸ் ஒப்பந்ததாரர் | 0.70 சதவீதம் மதிப்பீட்டு விலை விகிதத்தை விட குறைவு |
| | | | M/s தங்கராஜீ ஒப்பந்ததாரர் | 0.47 சதவீதம் மதிப்பீட்டு விலை விகிதத்தை விட அதிகம் |

**அலுவலகக்குறிப்பு**: 1. மன்றம் அனுமதிக்கலாம்.
2. மேற்படி பணிகளில் குறைந்த ஒப்பந்தப்புள்ளி விலை விகிதம் அளித்துள்ள திரு. தங்கராஜீ அவர்களின் ஒப்பந்தப்புள்ளியை ஏற்கலாம்.

**அலுவலகக் குறிப்பு :- 1. அனுமதிக்கப்பட்டது 2. ஏற்கப்பட்டது மன்ற தீர்மான எண்.1025**

22. கோபிசெட்டிபாளையம் நகரவை மகளிர் மேல்நிலைப்பள்ளியில் கழிப்பிடம் மற்றும் வகுப்பறை பராமரிப்பு பணிகள் மற்றும் புதுபித்தல் பணிகள் செய்ய தலைமையாசிரியர் அவர்கள் 23.09.2024ம் தேதிய கடிதத்தில் கேட்டுகொண்டமைக்கு, மேற்கண்ட பள்ளி ஆய்வு செய்த வகையில் கழிப்பிடம்

கூரை மட்டும் முழுவதுமாக பழுது ஏற்பட்டுள்ளது. எனவே கூரை முழுவதுமாக அகற்றிவிட்டு புதியதாக RCC கூரை அமைத்து Painting, HDPE Tank பொருத்த மதிப்பீடு ரூ.3.00 இலட்சம் ஆகும். அச்செலவின தொகையினை கல்வி நிதியில் இருந்து மேற்கொள்ள மன்றத்தின் அனுமதிக்கு வைக்கப்படுகிறது.

**அலுவலகக்குறிப்பு** : 1. மன்றம் அனுமதி அளிக்கலாம்,

2. மேற்காண் செலவின தொகை ரூ.3,00,000/-னை கல்வி நிதியில் இருந்து மேற்கொள்ளவும் மன்றம் அனுமதி அளிக்கலாம்.

**அலுவலகக் குறிப்பு :- 1 மற்றும் 2 அனுமதிக்கப்பட்டது மன்ற தீர்மான எண்.1026**

23. இந்நகராட்சிக்கு சொந்தமான ஆண்டு குத்தகை இனம் பழைய பேருந்து நிலைய வணிக வளாகத்தில் உள்ள நகராட்சி மிதிவண்டி நிலையத்தில் கட்டணம் வசூல் செய்வதற்கான உரிமம் எதிர்வரும் 30.10.2024 உடன் மூன்றாண்டு குத்தகை உரிம காலம் முடிவடைகிறது. இந்நிலையில் நகராட்சி பொறியாளர் அவர்களின் குறிப்பில் பழைய பேருந்து நிலைய வணிக வளாக கட்டிடம் இடிக்கப்பட்டு புதிதாக கட்டிடம் கட்ட மதிப்பீடு தயார் செய்து பிரேரணைகள் நகராட்சி நிர்வாக இயக்குநர் சென்னை அவர்களுக்கு சமர்ப்பித்து TUFIDCO APPRAISAL முடிக்கப்பட்டு தொடர் நடவடிக்கையில் உள்ளதாக தெரிவித்துள்ளார், மேலும் உதவி வருவாய் அலுவலர் அவர்கள் குறிப்பில் மேற்படி கட்டிடம் கட்ட மறு உத்திரவு கிடைக்கப் பெற்றவுடன் நடவடிக்கை மேற்கொள்ளப்பட வேண்டிய சூழ்நிலை இருப்பதால் மேற்படி குத்தகை இனத்திற்கு 30.10.2024 ற்கு பின்னர் மூன்றாண்டுக்கான ஏலம் மற்றும் ஒப்பந்தப்புள்ளி கோர முடியாத நிலையில் உள்ளது. எனவே வருவாய் இழப்பினை தவிர்க்கும் பொருட்டு ஏற்கனவே இருசக்கர வாகன நிறுத்துமிடம் கட்டணம் வசூல் செய்யும் குத்தகைதாரர் திரு, என். ராஜா என்பவருக்கு நவம்பர் 2024 முதல் டிசம்பர் 2024 வரை இரண்டு மாதங்களுக்கு நகர்மன்ற தீர்மான எண் 983 நாள் 27.9.2024 ல் உயர்வு செய்யப்பட்ட கட்டணத்தின் அடிப்படையிலும் கடந்த ஆண்டு குத்தகை தொகையிலிருந்து 5 % உயர்வு செய்தும் நிபந்தனையுடன் கால நீட்டிப்பு செய்து வழங்க தெரிவிக்கப்பட்டுள்ளது.

எனவே மேற்படி பழைய பேருந்து நிலைய வணிக வளாகத்தில் உள்ள மிதிவண்டி நிலையத்திற்கான குத்தகை உரிமத்தினை நவம்பர் 2024 மற்றும் டிசம்பர் 2024 ஆகிய இரண்டு மாதங்களுக்கு மட்டும் நிபந்தனையுடன் கடந்த ஆண்டு குத்தகை தொகையிலிருந்து 5 % உயர்வு செய்து வழங்க மன்றத்தின் அனுமதி வேண்டப்படுகிறது. (ந.க.எண். 2560/2024/அ3)

**அலுவலகக்குறிப்பு** : மன்றம் அனுமதி அளிக்கலாம்.

**அலுவலகக் குறிப்பு :- அனுமதிக்கப்பட்டது மன்ற தீர்மான எண்.1027**

24. கோபிசெட்டிபாளையம் நகராட்சி எல்லைக்குட்பட்ட வீரபாண்டி கிராமம் வார்டு - D, பிளாக் -6, நில அளவை எண்.175, நகரளவை எண்.14/1A1B ஆண்டவர் காலணி பகுதியில் இல் அமைக்கப்பட்ட 2.56 ஏக்கர் ஆண்டவர் காலணி குடியிருப்பு மனைப்பிரிவிற்கு கோவை மற்றும் நீலகிரி மண்டல நகர் ஊரமைப்பு துணை இயக்குநர் (தனி ) கோவை 2 அவர்களால் ப.மு.எண். 5133/78/கோ.நீ.மா-3 நாள்.03.07.1978 ஆம் ஆண்டு LP/R(CN) NO.72/78 இல் ஒப்புதல் அளிக்கப்பட்டது, மேற்படி ஒப்புதல் அளிக்கப்பட்ட மனைப்பிரிவு வரைபடம் மற்றும் நிபந்தனைகளின்படி 14.60 செண்ட் காலியிடம் பொது உபயோக பயன்பாட்டிற்காக ஒதுக்கீடு செய்யபட்ட இடத்தில் 7 செண்ட் அளவிற்கு மாவட்ட நீதிபதி முகாம் அலுவலகம் கட்டிடம் கட்ட மாவட்ட ஆட்சித்தலைவர் அவர்களுக்கு ஆட்சேப்பினையின்மை கடிதம் வழங்கப்பட்டதை எதிர்த்து திரு.சி. ஆனந்தக் குமார் என்பவரால் சென்னை உயர்நீதி மன்ற பொது பதிவாளர், மாவட்ட ஆட்சித் தலைவர் ஈரோடு மற்றும் இந்நகராட்சி ஆணையரை பிரதிவாதிகளாக சேர்க்கப்பட்டு W.P.NO.12967/2024 என எண்ணிடப்பட்டு சென்னை உயர்நீதி மன்றத்தில் வழக்கு தொடரப்பட்டது.

மேற்படி வழக்கில் நகராட்சியின் சார்பாக எதிர் வழக்காட சென்னை உயர்நீதி மன்ற வழக்கறிஞர் திரு.B. ஆனந்த் அவர்களை நியமனம் செய்யப்பட்டு வழக்காடப்பட்டு வருகிறது. இந்நிலையில் சென்னை உயர்நீதி மன்ற வழக்கறிஞர் திரு.B.ஆனந்த் அவர்கள் 03.07.2024ஆம் நாளிட்ட கடிதத்தில் கோரியவாறு வழக்கு கட்டணம் ரூ,20,000 வழங்க நகர்மன்ற தீர்மான எண்.993 நாள்.27.09.2024 இல் நகர்மன்றத்தால் ஒப்புதல் வழங்கப்பட்டுள்ளது. இந்நிலையில் மேற்படி வழக்கில் Additional Advocate General ஒருவரை கூடுதலாக நியமனம் செய்யப்படவேண்டும் என திரு.ஆனந்த வழக்கறிஞரால் தெரிவிக்கப்பட்டதையடுத்து Additional Advocate General திரு. காஜா நசுரூதின் அவர்களை நியமனம் செய்யப்பட்டது. இதனையடுத்து மேற்படி வழக்கில் Additional Advocate General ஆணையரின் சார்பாக ஆஜரானதற்கு வழக்கு கட்டணம் 40,000 வழங்குமாறு வழக்கறிஞர் கடிதம் FP NO. 625/2024 HNN நாள். 24.09.2024 ஆம் நாளிட்ட கடிதத்தில் தெரிவிக்கப்பட்டுள்ளது. எனவே

மேற்படி வழக்கறிஞரை நியமனம் செய்தமைக்கும் வழக்கு கட்டணம் ரூ.40,000 வழங்கவும் மன்றத்தின் அனுமதிக்காக வைக்கப்படுகிறது

**அலுவலக குறிப்பு :** மன்றம் அனுமதிக்கலாம்

**அலுவலகக் குறிப்பு :– அனுமதிக்கப்பட்டது மன்ற தீர்மான எண்.1028**

25. கோபிசெட்டிபாளையம் நகராட்சிக்குட்பட்ட 30 வார்டுகளில் 10 குடிநீர் மேல்நிலை நீர் தேக்கத் தொட்டிகள் மூலம் குடிநீல் விநியோகம் செய்யப்பட்டு வருகிறது. தலைமை நீரேற்று நிலையத்திலிருந்து நகரில் உள்ள 10 மேல்நிலை தொட்டிற்கு தண்ணீர் ஏற்ற குடிநீர் உந்து குழாய் 17.99 கி.மீட்டர் நீளத்திற்கும் நகரில் 130.00 கி.மீ நீளத்திற்கு குடிநீர் விநியோகம் குழாய் அமைத்து குடிநீர் விநியோகம் செய்யப்பட்டு வருகிறது. தற்போது நகராட்சி பகுதியில் 30 வார்டுகளிலும் 94 சுலிஸ் வால்வுகள் மூலம் அனைத்து பகுதிக்கும் குடிநீர் விநியோகம் செய்யப்பட்டு வருகிறது.

மேற்கண்ட குடிநீர் விநியோக பணிக்கு 20 நபர்களை கொண்டு குடிநீர் விநியோக பாரமரிப்பு பணிகளை வெளிமுகமை முறை (Out sourcing) மூலம் நகர்மன்ற தீர்மானம் எண்.875 நாள்.28.06.2024 அனுமதி பெற்று 28.06.2024 ல் பணி உத்திரவு LD MAN POWER SOLUTIONS Vellore அவர்களுக்கு வழங்கப்பட்டுள்ளது,

மேலும் இந்த 10 எண்ணிக்கைகள் கொண்ட குடிநீர் தொட்டிகளில் 347 எண்ணிக்கைகள் கொண்ட வால்வுகளை பகல் மற்றும் இரவு பணிகளில் 1 நிரந்தரமான குழாய் திருப்புனரும் மற்றும் 17 நபர்கள் (Out Sourcing) முறையில் குழாய் திருப்புனர்களும் பணி செய்து வருகின்றனர். தற்சமயம் நிரந்தரமாக உள்ள குழாய் திருப்புநர் 1 நபர் பணி மூப்பு காரணமாக அடுத்த மாதம் நவம்பர் (30.11.2024) அன்று ஓய்வில் செல்கிறார். தலைமை நீரேற்று நிலையத்தில் 1 நபர் பதவி உயர்வில் செல்கிறார். எனவே குடிநீர் பணி அத்தியாவசியமாக உள்ளதால் தலைமை நீரேற்று நிலையத்திலும், குடிநீர் வால்வுகளை பகல் மற்றும் இரவு பணிகளில் வேலை செய்ய ஆட்கள் போதுமானதாக இல்லாததால் கூடுதலாக 4 நபர்கள் (01.12.2024 முதல் ) மொத்தம் 24 நபர்கள் அமர்த்தி கொள்ளவும், அதற்கான செலவு தொகை ரூ.25,00,000/–க்கு LD MAN POWER SOLUTIONS Vellore அவர்களுக்கு அனுமதி வழங்க மன்றத்தின் அனுமதிக்கு வைக்கப்படுகிறது. ( ந.க.எண்.2376/2023/இ1)

**அலுவலகக்குறிப்பு:–** 1. மன்றம் அனுமதிக்கலாம்.

2. திருவாளர் L.D MAN POWER SOLUTION ஒப்பந்ததாரரை கொண்டு பணி மேற்கொள்ளவும், மேற்காண் செலவினத்தை நகராட்சி குடிநீர் நிதியில் செலவிடவும் மன்றம் அனுமதிக்கலாம்.

**அலுவலகக் குறிப்பு :– ஒத்திவைக்கப்பட்டது மன்ற தீர்மான எண்.1029**

26. கோபிசெட்டிபாளையம் நகராட்சிக்குட்பட்ட வார்டு எண் 12இல் உள்ள அம்மா உணவகத்தில் இருக்கும் கழிப்பறை கழிவுநீர் தொட்டி அருகில் வேலை பார்க்கும் அரசு மருத்துவமனை பணிகளால் பாதிக்கப்பட்டுள்ளது என உதவி பொறியாளர் அவர்களின் குறிப்பில் கோரப்பட்டமைக்கிணங்க அம்மா உணவகத்தில் வேலை பார்க்கும் பெண் பணியாளர்கள் கழிவறை பழுதடைந்துள்ளதால், அங்குள்ள கழிப்பறைக்கு septic tank (கழிவு நீர் தொட்டி) அமைக்க ரூ.2.00 இலட்சத்திற்கு மதிப்பீடு ஆகும். அச்செலவின தொகையினை பொது நிதியில் இருந்து மேற்கொள்ள மன்றத்தின் அனுமதிக்கு வைக்கப்படுகிறது.

**அலுவலகக்குறிப்பு** : 1. மன்றம் அனுமதி அளிக்கலாம்,

2. மேற்காண் செலவின தொகை ரூ.2,00,000/–னை பொது நிதியில் இருந்து மேற்கொள்ளவும் மன்றம் அனுமதி அளிக்கலாம்.

**அலுவலகக் குறிப்பு :– 1. மற்றும் 2. அனுமதிக்கப்பட்டது மன்ற தீர்மான எண்.1030**

.

27. கோபிசெட்டிபாளையம் நகராட்சிக்குட்பட்ட வார்டு எண் 17 கரட்டூர் உரக்கிடங்கில் நுண்ணுயிர் உரமாக்குதல் மையம் (MCC) செயல்பட்டு வருகிறது. இம்மையத்தினை கூடுதல் நகராட்சி நிர்வாக இயக்குநர் அவர்கள் 21.09.2024 அன்று நேரடி ஆய்வு மேற்கொண்டார்கள். ஆய்வு மேற்கொண்டதன் அடிப்படையில் கீழ்க்கண்ட அறிவுரை வழங்கியுள்ளார்கள்.

அதன் விவரம்

1. MCC Shed க்கு மின் விசிறிகள் அமைத்தல்
2. MCC Shed முன்புறம் மேற்கூரை அமைத்தல்
3. கழிவுநீர் முறையாக செல்ல ஏற்பாடு செய்தல்
4. தண்ணீர் வசதி மற்றும் கழிப்பிட வசதி செய்தல்

மேற்கண்ட பணிகளை செய்து தர கோரியுள்ளதற்கிணங்க, இப்பணிகளை செய்ய உத்தேச செலவின தொகை ரூ.5.00 இலட்சம் ஆகும். அச்செலவின தொகையினை பொது நிதியில் இருந்து மேற்கொள்ள மன்றத்தின் அனுமதிக்கு வைக்கப்படுகிறது.

**அலுவலகக்குறிப்பு** : 1. மன்றம் அனுமதி அளிக்கலாம்,

2. மேற்காண் செலவின தொகை ரூ.5.00,000/-னை பொது நிதியில் இருந்து மேற்கொள்ளவும் மன்றம் அனுமதி அளிக்கலாம்.

**அலுவலகக் குறிப்பு :- 1. மற்றும் 2. அனுமதிக்கப்பட்டது மன்ற தீர்மான எண்.1031**

28. கோபிசெட்டிபாளையம் நகராட்சியில் 2023-2024ல் கீழ்க்கண்ட பணிகளை செய்வதற்கு 08.10.2024 ஆம் தேதியில் ஒப்பந்தப்புள்ளிகள் கோரப்பட்டதில் கீழே குறிப்பிட்டுள்ளவாறு வரப்பெற்றுள்ள ஒப்பந்தப்புள்ளிகள் மன்றத்தின் பார்வைக்கும் முடிவிற்கும் வைக்கப்படுகிறது.

| வ. எண் | வேலையின் பெயர் | மதிப்பீட்டு தொகை ரூ. | ஒப்பந்தப்புள்ளி அளித்துள்ள ஒப்பந்ததாரர் பெயர் விவரம் | கொடுத்துள்ள ஒப்பந்தப்புள்ளி விலை விகிதம் |
|---|---|---|---|---|
| 1 | பேருந்து நிலையம் மழைநீர் வடிகால் மேல் உள்ள மூடு கற்களை இடித்து அப்புறப்படுத்தி மீண்டும் புதியதாக மூடு கற்கள் அல்லது Grill அமைக்கும் பணி (சிவ சண்முகம் வீதி2) | 4,00,000 | M/s.சஞ்சய் எலக்ட்ரிக்கல்ஸ் ஒப்பந்ததாரர் | 0.29 சதவீதம் மதிப்பீட்டு விலை விகிதத்தை விட குறைவு |
| | | | M/s தங்கராஜீ ஒப்பந்ததாரர் | 8.22 சதவீதம் மதிப்பீட்டு விலை விகிதத்தை விட அதிகம் |
| 2 | அறிவுசார் மையத்தில் கூடுதலாக சுற்றுச்சுவர் மற்றும் வடிகால் அமைக்கும் பணி | 9,50,000 | M/sலோகு கன்ஸ்ட்ரக்சன்ஸ் | 0.04 சதவீதம் மதிப்பீட்டு விலை விகிதத்தை விட குறைவு |
| | | | M/s அப்புசாமி ஒப்பந்ததாரர் | 1.22 சதவீதம் மதிப்பீட்டு விலை விகிதத்தை விட அதிகம் |

**அலுவலகக்குறிப்பு: 1.** மன்றம் அனுமதிக்கலாம்.

**2.** மேற்படி பணிகளில் வ.எண் 1 க்கு குறைந்த ஒப்பந்தப்புள்ளி விலை விகிதம் அளித்துள்ள திரு.சஞ்சய் எலக்ட்ரிக்கல்ஸ் அவர்களின் ஒப்பந்தப்புள்ளியை ஏற்கலாம்.

3. மேற்படி பணிகளில் வ.எண் 2 க்கு குறைந்த ஒப்பந்தப்புள்ளி விலை விகிதம் அளித்துள்ள திரு. லோகு கன்ஸ்ட்ரக்சன்ஸ் அவர்களின் ஒப்பந்தப்புள்ளியை ஏற்கலாம்.

**அலுவலகக் குறிப்பு :- 1. அனுமதிக்கப்பட்டது 2 மற்றும் 3. ஏற்கப்பட்டது மன்ற தீர்மான எண்.1032**

29. கோபிசெட்டிபாளையம் நகராட்சிக்கு சொந்தமான வாரசந்தையில் உள்ள நவீன ஆடுவதை சாலையில் கட்டணம் வசூல் செய்யும் உரிமம் 01.01.2022 முதல் 31.12.2024 வரை மூன்று ஆண்டுகளுக்கு திருமதி, செல்லம்மாள் என்பவருக்கு குத்தகை உரிமம் வழங்கப்பட்டிருந்தது, மேற்படி குத்தகை காலம் 31.12.2024 உடன் முடிவடைவதால் ஒப்படைக்கு நாள் முதல் மேலும் மூன்று ஆண்டுகளுக்கு குத்தகைக்கு விட பொது ஏலம் மற்றும் ஒப்பந்தப்புள்ளி கோரவும், அதற்கான ஏல அறிக்கையினை விளம்பரம் செய்ய ஆகும் செலவினத்தை நகராட்சி பொது நிதியிலிருந்து மேற்கொள்ளவும் மன்றத்தின் அனுமதி வேண்டப்படுகிறது. (ந.க.எண். 2560/2023/அ3)

**அலுவலக குறிப்பு :** மன்றம் அனுமதிக்கலாம்.

**அலுவலகக் குறிப்பு :- அனுமதிக்கப்பட்டது மன்ற தீர்மான எண்.1033**

30. கோபிசெட்டிபாளைம் நகராட்சி எல்லைக்குட்பட்ட பகுதிகளில் செல்லும், கீரிப்பள்ளம், ஓடையானது வார்டு "C" பிளாக்- 17, நகரளவை எண்.1 மற்றும் 2, வார்டு c, பிளாக்-5, நகரளவை எண்.13, பிளாக்4, நகரளவை எண்.35/1, பிளாக்.6, ல் நகரளவை எண்.37, பிளாக் எண் 31 ல்,

நகரளவை எண்.27, 70/1 வார்டுB, பிளாக்–36ல், நகரளவை எண்.36, 91/1, பிளாக்– 37/10, 12/1, இன் வழியாக பாரியூர் கிராமம் செல்கிறது. எனவும் இதன் மொத்த நீளம் சுமார் 3.50 கி.மீ எனவும் மேற்படி கீரிப்பள்ளம் ஓடையானது சீதாலட்சுமிபுரம், சிவசண்முகம் வீதி, சிலேட்டர்ஹவுஸ் வீதி, சாமிநாதபுரம் ஆகிய பகுதிகளில் அமைகிறது. மேற்படி கீரிப்பள்ள ஓடையில் சுமார் 202 ஆக்கிரமிப்புகள் உள்ளது. மேலும் மேற்படி கீரிப்பள்ளம் ஓடையில் நகராட்சியால் மழைகாலங்களில் தூர்வாரும் பணிகள் நடைபெற்று வருகிறது.

இதனையடுத்து கோபிசெட்டிபாளையம் சார் ஆட்சியர் அவர்களது, கூட்டத்தில் அறிவுறுத்தியபடி பொதுபணித்துறை உதவிசெயற்பொறியாளர், W.R.O, கோபி அவர்கள் கடிதம் CF 42/2013 நாள்.16.12.2013 இல் பொதுபணித்துறைக்கு சொந்தமான கீரிப்பள்ள ஓடையினை இந்நகராட்சியால் நகராட்சிக்கு சொந்தமாக எடுத்துக்கொள்ள சம்மதித்து கடிதம் வரப்பெற்றுள்ளது.

மேற்படி கீரிப்பள்ளம் ஓடை நகராட்சியின் மையப்பகுதியில் செல்வதாலும் நகராட்சியின் பயன்பாட்டிற்கு தேவைப்படும் என்பதாலும் பொதுமக்களின் நலன் கருதியும் மேற்படி கீரிப்பள்ளம் ஓடையில் உள்ள ஆக்கிரமிப்புதாரர்களுக்கு முறையாக அறிவிப்பு அனுப்பபட்டு ஆக்கிரமிப்புகள் அகற்றிய பின் நகராட்சியால் மேற்படி கீரிப்பள்ளம் ஓடையை எடுத்துக் கொள்ளவும் இதற்கான கருத்துருவை நகராட்சி நிர்வாக இயக்குநர் சென்னை அவர்களின் அனுமதி வேண்டி அனுப்பவும் மன்றத்தின் பார்வைக்கும் முடிவிற்கும் வைக்கப்படுகிறது. (ந.க.எண்.1193/2024/எப்1)
**அலுவலகக் குறிப்பு :** மன்றம் அனுமதிக்கலாம்.
**அலுவலகக் குறிப்பு :- அனுமதிக்கப்பட்டது மன்ற தீர்மான எண்.1034**

31. கோபிசெட்டிபாளையம் நகராட்சி எல்லைக்குட்பட்ட வீரபாண்டி கிராமம் வார்டு – D, பிளாக் –6, நில அளவை எண்.175, நகரளவை எண்.14/1A1B ஆண்டவர் காலணி பகுதியில் அமைக்கப்பட்ட 2.56 ஏக்கர் ஆண்டவர் காலணி குடியிருப்பு மனைப்பிரிவில் 14.60 செண்ட் காலியிடம் பொது உபயோக பயன்பாட்டிற்காக ஒதுக்கீடு செய்யப்பட்ட இடத்தில் 7 செண்ட் அளவிற்கு மாவட்ட நீதிபதி முகாம் அலுவலக கட்டிடம் கட்ட மாவட்ட ஆட்சித்தலைவர் அவர்களுக்கு ஆட்சேபனையின்மை கடிதம் நகராட்சியால் வழங்கப்பட்டது.

24.07.2024 ஆம் நாளிட்ட நகர்மன்ற தலைவர் மற்றும் நகர்மன்ற உறுப்பினர்கள் கையொப்பம் இட்டு வழங்கப்பட்ட கடிதத்தில் மாவட்ட ஆட்சித்தலைவர் அவர்களுக்கு வழங்கப்பட்ட இந்நகராட்சியின் ஆட்சேபனையின்மை கடிதத்தை ரத்து செய்ய மன்றத்திற்கு பொருள் வைக்குமாறு கோரப்பட்டதை அடுத்து நகர்மன்ற தீர்மான எண்.946 நாள். 07.08.2024 இல் ரத்து செய்து தீர்மானம் நிறைவேற்றப்பட்டது. இதன் விவரத்தை சென்னை உயர் நீதிமன்ற வழக்கு எண்.W.P.No.12967/2024 இல் தகவல் தெரிவிக்கப்பட்டது

இதனை தொடர்ந்து மேற்படி வழக்கில் நகர்மன்ற தலைவர் அவர்களை பிரதிவாதியாக சேர்க்கப்பட்டு சென்னை உயர் நீதிமன்ற உதவி பதிவாளர் அவர்களது 24.09.2024 ஆம் நாளிட்ட அறிவிப்பில் தெரிவிக்கப்பட்டு 21.10.2024 ஆம் நாளன்று இவ்வலுவலகத்திற்கு கிடைக்கப்பெற்றது. மேற்படி வழக்கில் நகர்மன்ற தலைவர் அவர்களின் சார்பாக எதிர்வழக்காட வழக்கறிஞர் திரு.G. மாசிலாமணி அவர்களை நியமனம் செய்யவும் இதற்கு ஆகும் உத்தேச செலவினம் ரூ.2,00,000 /– க்கு மன்றத்தின் அனுமதி வேண்டப்படுகிறது.(ந.க.எண்.1675/2024/எப்1)
**அலுவலகக் குறிப்பு** : மன்றம் அனுமதிக்கலாம்
**அலுவலகக் குறிப்பு :- அனுமதிக்கப்பட்டது மன்ற தீர்மான எண்.1035**

32. கோபிசெட்டிபாளையம் நகராட்சிக்குட்பட்ட வார்டு 15, அருள்மிகு சாரதா மாரியம்மன் திருக்கோயில் அருகில் உள்ள தண்ணீர் டேங்க் இடமாற்றம் செய்யக்கோரி செயல் அலுவலர் அவர்கள் 30.09.2024 ம் தேதிய கடிதத்தில் கோரியுள்ளமைக்கு உதவி பொறியாளர் அவர்களின் குறிப்பின்படி, தண்ணீர் தொட்டி அமைந்திருக்கும் இடம் மிகு குறுகலாக இருப்பதால் வாகன ஓட்டிகள் வாகனம் ஓட்டுவதற்கு மிகவும் இடையூறாக உள்ளது. அதனால் தண்ணீர் தொட்டியினை அருகில் இருக்கும் இடத்திற்கு மாற்றம் செய்வதற்கு உத்தேச மதிப்பீட்டு செலவினம் தொகை ரூ.2.00 இலட்சம் ஆகும்.

எனவே அச்செலவின தொகையினை பொது நிதியில் இருந்து மேற்கொள்ள மன்றத்தின் அனுமதிக்கு வைக்கப்படுகிறது

**அலுவலக குறிப்பு : 1. மன்றம் அனுமதிக்கலாம்.**

**2. மேற்காண் செலவினத் தொகை ரூ.2,00,000/- னை பொது நிதியிலிருந்து மேற்கொள்ளவும் மன்றம் அனுமதி அளிக்கலாம்.**

**அலுவலகக் குறிப்பு :- 1. மற்றும் 2. அனுமதிக்கப்பட்டது மன்ற தீர்மான எண்.1036**

33. கோபிசெட்டிபாளையம் நகராட்சிக்கு சொந்தமான தலைமை நீரேற்று நிலையம் மற்றும் தெற்கு பார்க் வீதி பூங்கா மற்றும், சத்தி டேங்க், பூரணி நகர் டேங்க், ஹசிங் யூனிட் டேங்க், பார்வதி நகர் டேங்க் , ஆகிய பகுதியில் பயனற்ற நிலையில் உள்ள பொருட்களில் மழைநீர் தேங்கி சுகாதார கேடு விளைவிக்கும் நிலையில் உள்ளது. எனவே பொது மக்கள், மற்றும் அங்கு பணிபுரியும் பணியார்களின் நலன் கருதி கீழே கண்டுள்ள பட்டியலில் கொடுக்கப்பட்டுள்ள பொருட்களை MSTC பொது துறை நிறுவனத்தின் மூலம் பொது ஏலம் வைக்க மன்றத்தின் அனுமதிக்கு வைக்கப்படுகிறது.

**Park Tank – ( North Park Street)**

| | |
|---|---|
| சின்டேக்ஸ் டேங்க் | 22 |
| போர்வெல் பைப் | 45 |
| கஸ்டிங் பைப் | 30 |
| ரிங்ஸ் (சின்ன) | 37 |
| ரிங்ஸ் (பெரிய) | 7 |
| ரிங்ஸ் (மூடி) | 4 |
| இரும்பு கதவு | 6 |
| தகர சீட்டு | 2 |
| வால்வு | 1 |
| இரும்பு ஆங்கில் | 12 |
| இரும்பு ஆங்கில் ( மேல் கூரை) | 7 |
| பார்க் (சுற்று கதவும்) | 3 |
| இரும்பு வேலி | 1 |
| மரகதவு ஜன்னல் | 11 |
| சிமெண்ட் ஜன்னல் | 4 |
| இரும்பு கம்பி | 7 |
| பச்சைபைப் (ஓஸ்) | 1 |
| PVC பைப் | 1 |
| சிமெண்ட் பைப் | 1 |

**SATHY ROAD TANK**
**OLD MATERIALS**

| SL.NO | OLD METERIALS | QUENTITY |
|---|---|---|
| 1 | 12" AC pipe ( 4.5 met) | 38 Nos |
| 2 | 12" AC pipe ( 2 met) | 11Nos |
| 3 | MS pipe (12) 3met | 1 No |
| 4 | 10 Tiles Piece 1 met | 1 No |
| 5 | MS Tiles Piece (16") 1.20 met | 1 No |
| 6 | MS Tank | 3 Nos |
| 7 | MS Lorry Tanker | 1 No |
| 8 | MS Tiles Piece (12") 1met | 1 No |
| 9 | AC Pipe 4" ( 4met) | 82Nos |
| 10 | Mini dozer<br>Yavaraj -215<br>(TN - 36-AA.4165) | 1 No |

**OLD MATERIAL LIST**

| | | | |
|---|---|---|---|
| 1 | 35 HP Turbine Moter | 3 Nos | Wash Water room |
| 2 | 35 HP Turbine Pump | 2 Nos | குடியிருப்பு Ravi |
| 3 | B" D/F Column pipe with soft | | குடியிருப்பு + Scheme sounth six + Raw water room west side |
| 4 | 300m Sluicevaive | 2 Nos | குடியிருப்பு oht |
| 5 | 300mm N.R.V | 2 Nos | குடியிருப்பு oht |
| 6 | 50 Hp Motor | 5 Nos | 4 Nos waste water room + 1 சங்கு room |
| 7 | 50 Hp Pump | 2 Nos | Wash water room |
| 8 | Oil starter | 6 Nos | 1 + 1 No – I scheme Pump room + 1+1 Nos – சங்கு room + wash water room 4–4 |
| 9 | 60 Hp Submer sable motor | 1 No | Wash water room (Alum room Back site) |
| 10 | Weight Mechine 1+1 | 2 Nos | Wash water room (Alum room Back site) 1 + குடியிருப்பு |
| 11 | Air Cylinder | 1 No | குடியிருப்பு எதிர்புறம் |
| 12 | Liquid Chlorine Cylinder 2.10x.80 | 4 Nos | குடியிருப்பு எதிர்புறம் |
| 13 | 8" Bend | 7 Nos | குடியிருப்பு எதிர்புறம் + குடியிருப்பு |
| 14 | 8" N.R.V | 2 Nos | குடியிருப்பு எதிர்புறம் + குடியிருப்பு |
| 15 | I Scheme Bridge (Clariyies) | 1 No | Air Cylinder near |
| 16 | Gear Box (Self Drive) | 1 No | குடியிருப்பு opposide |
| 17 | Self Drive Drum | 1 No | குடியிருப்பு + 1 II Scheme opposide செம்பருத்தி செடி opposide |
| 18 | Cribe item | 2 Nos | குடியிருப்பு + 1 II Scheme opposide செம்பருத்தி செடி opposide |
| 19 | 10" Sluice value | 1No | |
| 20 | Alum Tank Motor with agitator | 3 Nos | குடியிருப்பு |
| 21 | Chlorine Plant Plastice –2, Tower plan –2 | 4 Nos | குடியிருப்பு + Chlorine room / =4 Nos |
| 22 | 4" GI Pipe | 6M | செம்பருத்தி செடி opposide |
| 23 | 300mm D/F Pipe MS 1.30 | 1.30m | குடியிருப்பு எதிர்புறம் |
| 24 | Raw Water MLD Meter with Scale and stand | 1 No | Old wash water room |

| Sl.No | OLD MATERIALS | QUANTITY |
|---|---|---|
| 1 | 12" DR Pipe ( 5.50 met) | 6 Nos |
| 2 | 12" DR Pipe ( 3.30 met) | 1 No |
| 3 | 14" DR Pipe (1.5 met) | 1 No |
| 4 | 16" DR Pipe (2.50 met) | 1 No |
| 5 | 16" DR Pipe (1.20 met) | 1 No |
| 6 | T Bend ( Pressure Checkup Bend) | |
| 7 | T Bend 300mm | 1 No |
| 8 | T Bend 200mm | 1 No |
| 9 | T Bend 150mm | 1 No |

**POORANI NAGAR TANK**

| Sl.No | OLD MATERIALS | QUANTITY |
|---|---|---|
| 1 | Submerciable Motor 15Hp | 1 No |

**HOUSHING UNIT TANK**

| Sl.No | OLD MATERIALS | QUANTITY |
|---|---|---|

| | | |
|---|---|---|
| 1 | 300 mm Sluice value | 1 No |
| 2 | 250 mm Sluice value | 1 No |
| 3 | 250 mm AC Pipe (10kgf) | 5 Meter |
| 4 | Houshing Unit Motor with pump | 1 No |
| 5 | Push Cart Vehicle | 4 Nos |
| 6 | 300 mm AC pipe | 3 Meter |

**PARVATHI NAGAR TANK**

| Sl.No | OLD MATERIALS | QUANTITY |
|---|---|---|
| 1 | Borewell Tank | 59 Nos |
| 2 | Bore well male body | 58 Nos |
| 3 | Telescoping Stand | 5 Nos |
| 4 | Pipe (32 mm) | 50 Nos |
| 5 | Empty Cylinder | 35 Nos |
| 6 | 1.5 Hp Motor with Pump | 9 Nos |
| 7 | 4 Hp Motor | 1 No |

**அலுவலகக்குறிப்பு:** 1. மன்றம் அனுமதி அளிக்கலாம்
2. மேற்காண் பட்டியலில் கண்டுள்ள பொருட்களை MSTC பொது துறை நிறுவனத்தின் மூலம் பொது ஏலம் வைக்க மன்றம் அனுமதி அளிக்கலாம்.

**அலுவலகக் குறிப்பு :– 1. மற்றும் 2. அனுமதிக்கப்பட்டது மன்ற தீர்மான எண்.1037**

34. இந்நகராட்சியின் மூலம் தினமும் சேகரிக்கப்படும் அனைத்து கழிவுகளும் மூன்று நுண் உரமாக்கல் மையங்கள், இரண்டு வளமீட்பு மையங்கள், ஒரு எரியூட்டும் இயந்திர மையம் மற்றும் ஒரு உயிரி எரிவாயு கூடம் போன்ற செயலாக்க மையங்களில் செயலாக்கம் செய்யப்படுகிறது. இவைகள் 4 இடங்களில் அமையப் பெற்றுள்ளதால் அங்கு தினமும் மேற்கொள்ளப்படும் பணிகளை CCTV கேமராக்கள் மூலம் கண்காணிக்க நான்கு CCTV கேமராக்கள் பொருத்தப்பட்டுள்ளது. அதற்கு நான்கு ஜியோ சிம்கார்டுகள் வாங்கி கொள்ளவும் நான்கு சிம்கார்டுகளுக்கும் ஆண்டு ஒன்றிற்கு ரூ.3,599 /– பிளானில் (2.5 GB/ Per day) ரீசார்ஜ் செய்து கொள்ளவும் ஆண்டு ஒன்றிற்கு ஆகும் செலவினம் ரூ.14,396/– ற்கும் மன்ற அனுமதி வேண்டப்படுகிறது. (1753/2024/எச்1)

**அலுவலக குறிப்பு :** 1. மன்றம் அனுமதிக்கலாம்.
2. அவசர அவசியம் கருதி 4 No's Jio Sim கார்டுகள் ரீசார்ஜ் உடன் ரூ.1,775/– ற்கு துப்புரவு அலுவலரால் வாங்கி பொருத்தி பணி மேற்கொண்டு வருவதையும் அத்தொகையை திரும்ப வழங்கவும் மன்றம் அனுமதிக்கலாம்.
3. அதற்காகும் செலவினத்தை நகராட்சி பொது நிதியிலிருந்து வழங்க மன்றம் அனுமதிக்கலாம்.

**அலுவலகக் குறிப்பு :– 1. 2 .மற்றும் 3.அனுமதிக்கப்பட்டது மன்ற தீர்மான எண்.1038**

(ஒப்பம்)–என்.ஆர்.நாகராஜ்
தலைவர்
கோபிசெட்டிபாளையம் நகராட்சி

/ உண்மை நகல்/

ஆணையாளர்
கோபிசெட்டிபாளையம் நகராட்சி